# திருவருகைக்காலம் முதல் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

திருவருகைக்காலத்தின் முதலாம் ஞாயிறு.

கத்தோலிக்கர்களுக்கு இது புத்தாண்டு தொடக்க நாள். புதிய வழிபாட்டு ஆண்டுக் காலத்தின் முதலாம் நாள்.

அனைவருக்கும் அன்பார்ந்த வாழ்த்து சொல்லி வரவேற்கின்றோம். இந்த நாளும், வரும் ஆண்டும் உங்கள் ஆன்ம வாழ்வுக்கு நலம் சேர்க்கும் நல்லாண்டாக அமைய வாழ்த்துகின்றோம்.

விழிப்பாய் இருக்க, ஆயத்தமாய் இருக்க விடுக்கப்படும் காலம் இது. ஆண்டவரின் இரண்டாம் வருகை உண்டு என்று நம்பும் நாம், அக்காலத்தை எதிர்நோக்கி விழிப்பாய் இருப்பது அவசியமானது.

விழிப்பாய் இருக்கும் நாம், பகலிலே நடப்பது போல நடந்து கொள்ள வேண்டும். இருளின் ஆட்சிக்குரிய செயல்களை களைந்து, ஒளியின் மக்களுக்குரிய செயல்களை செய்து வரவேண்டும். இதுவே சாட்சியமான வாழ்வாகும்.

இத்தகைய உணர்வுகளுடன் பயணிக்க வரம் கேட்டு பலியிலே பங்கேற்போம். பயன்பெறுவோம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. திருத்தந்தையையும், உடன் பணியாற்றுகின்ற அனைவரையும் ஆசீர்வதித்தருளும். ஆவியின் அருளால் மக்களின் நலன் கருதியெடுக்கும் முன்முயற்சிகளில் நிறைந்த பலன் பெற்றிட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. புதிய வழிபாட்டு ஆண்டுக்கால நாட்கள் இறையருள் பொழியும் நாட்களாக அமைய முந்த முந்த உம்மை தேடிட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வாரும் இயேசுவே வாரும் என்றழைக்கின்ற இக்காலக்கட்டத்தில், ஒளியின் செயல்களின் வழி வாழ்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com